Registered as a Newspaper     பக்கங்கள் 04     விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM     மக்கள் தினசரி     Peoples Daily

நாதம் 01     திருவள்ளுவர் ஆண்டு 2024     மார்கழி 24     (08-01-1994)     சனிக்கிழமை     ஓசை 324

## கற்பித்தல் தொழில்நுட்பம் பரீட்சார்த்த திட்டம் வெற்றி

கற்பித்தல் தொழில்நுட்பம் பற்றிய பரீட்சார்த்தத் திட்டம் வெற்றியளித்துள்ளதாக யாழ். கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது. யாழ். கல்வித்திணைக்கள தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட இப் பயிற்சித்திட்டத்தில் பல்வேறு திறன்மட்டங்களைக் கொண்ட மாணவர்கள், ஆசிரியர்கள் 32பேர் ஒரு குழுவில் விஞ்ஞான பாடத்தில் அடங்கக்கூடிய இலத்திரனியல் எனும் பாடம் பரீட்சார்த்தமாக, வாழ்க்கைத்திறன் கற்றல் - கற்பித்தல் தொழில்நுட்பத்தைப்பற்றி கற்பிக்கப்பட்டது, இதற்கான பயிற்சித்திட்டம் 11 நாட்கள் செயன்முறையாக மற்றும் அறிமுறையாகவும் நடாத்தப்பட்டது. அதன் முடிவில் மேற் (4ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைமீது ஹெலி தாக்கு; மாணவி ஒருவர் படுகாயம்

### ஆசிரியர், மாணவர் சிதறி ஓட்டம்

(நமது நிருபர்)

சிறிலங்கா விமானப்படையின் உலங்குவானூர்தி ஒன்று பாடசாலைமீது நடாத்திய தாக்குதலினால் மாணவி ஒருவர் படுகாயமடைந்ததுடன் பாடசாலைக் கட்டடங்களும் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 11 மணியளவில் அச்சுவேலிப் பகுதியை திடீரென வட்டமிட்ட உலங்குவானூர்தி சரமாரியாக கலிபர்த் தாக்குதலை அச்சுவேலி மகாவித்தியாலயம்மீது மேற்கொண்டது.

பாடசாலை நடைபெற்றுக்கொண்டிருந்ததால் பெருமளவு மாணவர்கள் வகுப்பறைகளில் கற்றுக்கொண்டிருந்தனர். இதன்போது உலங்குவானூர்தி கலிபர்த் தாக்குதலை நடாத்தியதனால் ஆசிரியர்களும், மாணவர்களும் பதற்றமடைந்த நிலையில் நாலாபுறமும் சிதறி ஓடிப் பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக்கொண்டனர்.

இதன்போது அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த ரமீனா ராணி மார்க்கண்டு (வயது 16) எனும் க. பொ. த. சாதாரணதர மாணவி படுகாயமடைந்தார். இவரது வலதுபுற கால் பாதத்தினூடாக கலிபர் சன்னம் துளைத்துச்சென்றதால் இவர் காயமடைந்தார். இதனைத்தொடர்ந்து பாதுகாப்புக்கருதி (4ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம்; சிங்களவருக்கு அது சொந்தமில்லை!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதி தமிழர்களுக்கே சொந்தமான நாடு அது சிங்கள மக்களுக்கோ முஸ்லிம் மக்களுக்கோ சொந்தமானதல்ல என ஜனதா மித்ரா எனும் அமைப்பின் சந்திரா ரணவக்க 'ராவய' சிங்கள பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கே சொந்தமானதால் அங்கே போராடுபவர்களுக்கு அவர்கள் கேட்பதை கொடுத்துவிடவேண்டும். அப்போது தான் அனைத்துப் பிரச்சினையும் தீரும். ஆனால் எம் பழைய தலைவர்கள் இப்பிரச்சினையைத் தீர்க்க விருப்பமின்றியும் விட்டுக் கொடுத்தலின்றி பிடிவாதமாகவும் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதனாலேயே வடக்கு - கிழக்கு பிரச்சினை தீர்வின்றி தொடருகிறது, வடக்கு - கிழக்கு பிரச்சினையை யுத்தம்மூலம் ஒருபோதும் தீர்க்க முடியாது. சமரசப் பேச்சு மூலமே தீர்வுகாண முடியும். இப்பிரச்சினை முன்பு நான்கு சுவர்களுக்குள்ளேயே நடந்து வந்தது ஆனால் இன்று அனைவருக்கும் இப்பிரச்சினையின் உண்மை நிலை தெரியவந்துள்ளது. எனவே சமாதானப் பேச்சு மூலமே தீர்வுகாண சகலரும் முன்வர வேண்டும்எனவும்சந்திராரணவக்க தனது பேட்டியின் போது மேலும் தெரிவித்தார்.

## "மாகோ" கப்பல் நாளை வந்து சேரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிற்கான மாவையும், பயணிகளையும் ஏற்றிக் கொண்டு 'மாகோ' கப்பல் நாளையதினம் பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுக்காலை 3ஆயிரத்து 200 மெற்றிக் தொன் மாவுடனும், 80 பயணிகளுடனும் பருத்தித்துறையை வந்தடையும் என முன்னர் செயலக வட்டாரங்கள் தெரிவித்திருந்தபோதிலும் பிந்திக் கிடைத்த தகவலின்படி இக் கப்பல் இன்று மாலையே திருமலையிலிருந்து புறப்படும் என தெரியவந்துளளது.

இக்கப்பல் பருத்தித்துறையை வந்தடைந்ததும் உடனடியாக மாவை இறக்கி கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பேக்கறிகளுக்கும் வழங்குவதற்கான சகல நடவடிக்கைகளையும் யாழ். செயலக புனர்வாழ்வுப்பிரிவு மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது, (ச, சி)

## மேலும் இரு மீனவர்சடலம் ஊரிக்காட்டுப்பகுதியில் மீட்பு

(வடமராட்சி)

தொண்டமனாறு ஊரிக்காடு கடலையடி கடற்பகுதியில் வைத்து நேற்று பிற்பகல் 3-00 மணியளவில் கடற்படையால் கொல்லப்பட்ட இருவரது சடலங்கள் மீட்கப்

இதுவரை சந்தியாப்பிள்ளை இருதயராஜ் (சற்கோட்டை) மற்றும் பலாலியைச் சேர்ந்த தேவதிரவியம் - ஜெயரட்ணம் சின்னப்பொடி - பாலசிங்கம் தியோகுப்பிள்ளை - அன்ரன் ஜேசுதாஸ், ஆகியோரது சட

## [ கனடா: ரொரொன்டோவில் ]

# இலங்கைத் தமிழர் கோஷ்டி மோதல்

## இளைஞர் பலி; பலர் படுகாயம்

(கொழும்பு)

கடந்த வியாழனன்று கனடா ரொரொன்டோ நகரில் இரு தமிழ் இளைஞர் கோஷ்டிகள் மோதியதில் ஒருவர் பலியானார். பலர் காயமடைந்தனர். இம் மோதலுக்கான காரணம் தெரியவரவில்லை.

## தொண்டமனாறுபாடசாலை ஹெலி தாக்குதலால் சேதம்

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வடமராட்சிக் குடியிருப்புக்கள் நோக்கி வந்த உலங்குவானூர்தி ஒன்று பரவலாக அரை மணி நேரம் தொடர்ச்சியாக கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

உலங்குவானூர்தி நேற்றுக்காலை 10 மணியளவில் தொண்டமனாறு, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, வல்வை, நவிண்டில் பகுதிகள் மீது சரமாரியாக தாக்கியது.

தொண்டமனாறு பகுதியில் மேற்கொண்ட தாக்குதலில் வீரகத்திப்பிள்ளையார் பாடசாலை சிறு சேதமடைந்தது. பாடசாலையில் மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருந்த போது இத்தாக்குதல் நடைபெற்றது

மற்றும் செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு வந்த பக்தர்களும், அப்பகுதியைச் சேர்ந்த மக்களும் மறைவிடங்களை நோக்கி ஓடினர். அதேசமயம் தொண்டமனாறு பகுதியில் இரண்டு பொம்மர்களும் வட்டமிட்டன, (யோ)

## சூரியகந்த புதைகுழிகள் தோண்டும் வேலை ஆரம்பம்

(கொழும்பு)

சூரியகந்த மலைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகளைத் தோண்டும் வேலைகள் இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும், இப்புதைகுழிகளை மனிதர் குச்செல்லவிதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுவிட்டதென்றும் அங்கு அப்புதைகுழிகளைத் தோண்ட மக்களை உதவுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

3-00 மணியளவில் கடற்படையால் கொல்லப்பட்ட இருவரது சடலங்கள் மீட்கப்பட்டன.

பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து சற்கோட்டையில் தங்கிவந்த குடும்பத்தலைவர்களான ஜக்கிரிகாஸ் எட்வேட் இராசநாயகம், சின்னத்துரை - தியாகராசா ஆகிய மீனவரது சடலங்களே மீட்கப்பட்டன.

சின்னப்பொடி - பாலசிங்கம் தியோகுப்பிள்ளை - அன்ரன் ஜேசுதாஸ், ஆகியோரது சடலங்கள் மீட்கப்பட்டன.

மேலும் மூன்று மீனவர்களது சடலங்கள் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீட்ட சடலங்கள் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டு சற்கோட்டையில் அடக்கம் செய்யப்பட்டன. (யோ)

கிழக்கு உள்ளூராட்சி தேர்தல்

## ஐ. தே. க. வேட்பாளர்கள் டி. பி. விஜேதுங்க சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்ப்பகுதிகளில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட உள்ள ஐ. தே. கட்சி வேட்பாளர்கள் பலர் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவைச் சந்தித்து உரையாடினர்.

ஜனாதிபதியுடன் பிரதமரும் பல அமைச்சர்களும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். பல பயமுறுத்தல் கடிதங்கள் தமக்கு கிடைத்திருப்பதாக அவர்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டனர்.

அரசியலில் பயமுறுத்தல்கள் சகஜம் என ஜனாதிபதி அவர்களுக்கு கூறி தைரியம் ஊட்டினார்.

நடைபெறவுள்ள மேற்படி தேர்தலின்போது பாதுகாப்பு படையினரைத் தவிர வேறு இயக்கங்கள் ஆயுதங்களுடன் நடமாடுவது தடைசெய்யப்படவேண்டும் என வேட்பாளர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட இயக்கங்களுடன் பேசப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார்.

வவுனியா நகரசபைத்தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அங்கத்தவர் ஒருவரின் பெயரும் இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தபால் விநியோகத்தை சீராக்குமாறு

## ஹமில்டன் வனசிங்கவிற்கு மாணிக்கவாசகர் கடிதம்

(நமது நிருபர்)

பல மாதகாலமாக குடா நாட்டுக்கான தபால்விநியோகம் தடைப்பட்டுள்ளது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கவிற்கும் சிறிலங்கா தபால்மா நாயகம் அவர்களுக்கும் யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதியுள்ளார்.

குடா நாட்டுக்கான தபால் விநியோகத்தை சீராக நடாத்துவதற்கு உதவுமாறு ஹமில்டன் வனசிங்கவையும், சிறிலங்கா தபால்மா நாயகம் அவர்களையும்கேட்டுக்கொள்ளும் கடிதங்களை தான் தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு எழுதியுள்ளதாக குறிப்பிட்டார். (சி), (ச)

பலர் காயமடைந்தனர். இம் மோதலுக்கான காரணம் தெரியவரவில்லை.

இரு கோஷ்டியும் துப்பாக்கிச் சூடு நடாத்திய தாகவும் தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவம் பற்றி கனேடிய பொலிசார் விசாரணை நடாத்தி வருகின்றனர். இதே போன்ற ஒரு மோதல் கடந்த டிசம்பர் 31 ஆம் திகதியன்றும் நடைபெற்றதில் தமிழ் இளைஞர் ஒருவர் காயமடைந்தார். இம் மோதலுக்கான காரணம் தெரியவரவில்லை.

இம் மோதல் சம்பவங்கள் ரொரொன்டோநகரில்தமிழர்கள் அதிகம் வாழும் வீதி ஒன்றிலேயே நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடாவில் அண்மைக்காலமாக தமிழ் இளைஞர்களிடையே கோஷ்டி மோதல்கள் அதிகரித்து வருவதால் தமிழ் இளைஞர்கள் மீதான கனேடிய பொலிசாரின் கண்காணிப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவங்கள் குறித்து உள்ளூர் அதிகாரிகளின் முறைப்பாடுகளைத் தொடர்ந்து கனேடிய அரசு இலங்கைத் தமிழர்களின் அண்மைக்கால இந் நடவடிக்கைகள் குறித்து விசனம் அடைந்துள்ளதாகவும் இது தொடர்பாக கடும் நடவடிக்கைகளை எடுக்க ஆலோசித்து வருவதாகவும் தெரியவருகிறது.

### இ. தொ. கா. காரியாலயம் முன்

# உண்ணாவிரதிகள் மீது காடையர் கோஷ்டி சூடு

## கொள்ளுப்பிட்டியில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காரியாலயத்தினுள், மேற்படி காரியாலயத்தில் வேலைசெய்யும் ஊழியர்கள் 3ஆம் திகதி உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தவேளையில் உள்ளே நுழைந்த கோஷ்டி ஒன்று துப்பாக்கி வேட்டு தீர்த்தும், பெண்களை தூஷித்தும் பெரும் ரகளையில ஈடுபட்டது.

மாகாணசபையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு முரணாக செயற்பட்ட 8பேர் நீங்கலாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி மீண்டும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இணைந்து அதை பலமுள்ள தாக்கவேண்டும் என்று கடந்த 3-ம்திகதி இந்த ஊழியர்கள் உண்ணாவிரத, சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டிருந்தனர்.

சத்தியாக்கிரகம் காலை ஆரம்பமானது. ஆண்களும் பெண்களும் சேர்ந்து சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பிற்பகல் இரண்டு மணியளவில் சாரம், மேற்சட்டை அணிந்தோர் சுமார் எண்பதிற்கு மேற்பட்டோர் காரியாலயத்தை நோக்கி வந்தனர் இவர்கள் அங்கிருந்த பெண்களைப்பார்த்து தூசண வார்த்தைகளால் தூற்றியுள்ளனர்.

செல்லச்சாமியின் ஆதரவாளர்கள் மாத்திரமே இங்கு இருக்கவேண்டும் என்று அவர்கள் சிங்கள மொழியில் தூற்றியதாக பெண் ஊழியர் ஒருவர் குறிப்பிட்டார்.

வாசல்படியில் அமர்ந்திருந்த எம்மை மிதித்துக் கொண்டு உள்ளே செல்ல முயற்சித்தபோது பெண்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்றும் நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

ஆரம்பிக்கப்படும் எனவும், இப்புதைகுழிகளை மனிதர்கள் மூலமே தோண்ட வேண்டும் எனவும் கனரகஇயந்திரங்கள் எதுவும் உபயோகப்படுத்தக்கூடாதென்றும் எம்பிலிப்பிட்டிய நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பொதுமக்கள் அப்பகுதிக்

வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் அங்கு கண்டுபிடிக்கப்படும் எலும்புக் கூடுகளை அடையாளம்காண உதவுமாறு பொதுமக்கள், பத்திரிகையாளர், சட்ட நிபுணர்கள், பொதுநலஅமைப்புகளை அவர் கோரியுள்ளார்.

சூரியகந்த 'புதைகுழி விவகாரம்'

## செய்தியாளர்கள் மீது ரகசியப்பொலிஸ்விசாரணை

(கொழும்பு)

இரத்தினபுரி சூரியகந்த மனித எலும்புக்கூடுகள் தொடர்பாக செய்தி வெளியிட்ட பத்திரிகை காரியாலயங்களில் இரகசிய பொலிஸ் விசாரணை நடைபெற்றுள்ளது.

நேற்று நண்பகல் "திவயின" செய்திநிறுவனத்திற்கு சென்ற இரகசிய பொலிசார் இங்கு கடமை புரியும் இரு செய்தியாளர் உட்பட ஆசிரியர்களிடம் வாக்கு மூலத்தை பெற்றுக் கொண்டதாகவும் சூரியகந்த புதைகுழி தோண்டும்போது அங்கு சமுகம் கொடுத்த செய்தியாளர் நேற்று அலுவலகத்தில் இன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளுப்பிட்டி இ.தொ.கா. காரியாலயம் உடைப்பு

### செல்லச்சாமி பொலிஸில் முறையீடு

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காரியாலயத்தை உடைத்து அநேக ஆவணங்கள் திருடப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் செல்லச்சாமி கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார்.

அமைச்சர் செல்லச்சாமியின் புகாரை அடுத்து பொலிஸ்கோஷ்டி ஒன்று உடனடியாக குறிப்பிட்ட அலுவலகத்துக்குச் சென்றது.

## தொண்டா - செல்லச்சாமி முரண்பாட்டைதீர்க்கமுயற்சி

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர் எஸ். தொண்டமானும், பொதுச் செயலாளர் எம். எஸ். செல்லச்சாமியும் தங்களுக்கிடையிலான பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்ந்துள்ளனர்;

தங்களுக் கிடையிலான தகராறை தீர்த்துக் கொள்ள மீண்டும் சந்தித்து பேசவிருப்பதாக திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

# வரி விளம்பரம்


## பழங்கள் தேவை

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கின்றோம். TASTE LINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenler Lane, Jaffna.

(சி-8249)

## அறிவித்தல்

நியூ விக்ரேஸ் வாடிக்கையாளரின் கவனத்திற்கு 31-12-93க்கு முன் எம்மிடம் திருத்துவதற்கு ஒப்படைத்த பொருட்களை 31-1-94க்கு முன் பெற்றுக் கொள்ளவும். 31-1-94 க்கு பின் அவற்றை மீளப் பெற முடியாது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். நியூ விக்ரேஸ், பி. எம். சி. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (7148)

## விற்பனைக்கு

நல்ல இனத்தை சேர்ந்த அழகிய பெண், ஆண் அல்சேசியன் நாய் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு; நாதன் மருந்தகம் பருத்தித்துறைவீதி, கல்வியங்காடு யாழ்ப்பாணம். (7165)

## உணவு சேவை யாழ்நகர்

மதிய உணவு - மீன், இறைச்சி, மரக்கறி (11.30 - 2.00) சூப்வகை - மரக்கறி மாமிசம் விசேஷ உணவு - புரியாணி, நூடில்ஸ், பிறைட் றைபிஸ் பரிமாறும் சேவை வழங்கப்படும் ஓடர்களுக்கு நாடவேண்டிய முகவரி ''காருண்ணியா சைபினிஸ் ஹொட்டேல்'' 166B, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (7168)

## MATHS

புலமைப்பரிசில் வகுப்பிலிருந்து G. C. E. (O.L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், தவணைப் பரீட்சைகளில் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களுக்கும் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி.

(7149)

# தேவை

## விவசாயப் பண்ணைப் பொறுப்பாளர்

நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தின் விவசாயப் பண்ணைப் பொறுப்பாளர்பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் தமது பெயர், முகவரி, வயது என்பவற்றோடு (1) கல்வித் தகைமைகள் (2) விவசாயப்பண்ணை அனுபவம் (3) இப்பொழுது வகிக்கும் அல்லது வகித்த பதவி (4) எதிர்பார்க்கும் சம்பளம் என்பவற்றைக் குறித்துத் தமது விண்ணப்பங்களை 21-01-1994ஆம் திகதிக்கு முன் பின்னாலுள்ள முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கோரப்படுகிறார்கள்.

விண்ணப்பதாரர் இருபத்தைந்து (25) வயதுக்கு மேற்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

விவசாயப் பண்ணையில் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டமிடல், திட்டங்கள் பற்றிச் சங்க நிர்வாகத்துக்குத் தெரிவித்தல், திட்டங்களை நடைமுறைப்படுத்த ஆளணியையும் சங்க வளங்களையும் சிறந்த முறையில் பயன்படுத்தல் முதலிய நடவடிக்கைகளில் அறிவும் அனுபவமும் உடையவராய் விண்ணப்பதாரர் இருத்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் பின்னர், நியமனம் முதலில் ஒப்பந்த அடிப்படையில் செய்யப்படும்.

சங்க எல்லைக்குள் வசிப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

த. பேரம்பலம்
பொதுமுகாமையாளர்.

நல்லூர் ப.நோ.கூ.சங்கம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
07-01-1994

(சி-8304)

## POSTGRADUATE DIPLOMA / DIPLOMA IN ENGLISH LANGUAGE TEACHING 1992/93

The Lectures for the above Courses will commence on 1994-01-17 The letters have been already Posted to the selected candidates to register for the above Course and meet the Head, English Language Teaching Centre at 10 00 a. m. on 1994-01-10.

**Registrar**
University of Jaffna.
1994-01-07

(சி-8303)

## Personal NEW SCIENCE CENTRE

(எழிலகம் முன்- யாழ்ப்பாணம்)

**94 A/L**

**விஞ்ஞானப்பிரிவு**

க. பொ. த (உயர்தர) பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான
ஃ சனி - ஞாயிறு ஃ
ஃ திங்கள் - செவ்.
வியாழன்- வெள்ளி ஃ
வகுப்புக்கள்
**ஆரம்பம்.**
**09-01-94 ஞாயிறு**
(நேர அட்டவணையை நேரில் பெறவும்)

SPOKEN ENGLISH WITH GRAMMAR by Mr. M. A. HARI B. A. (Dip In Eng.)
சனி - ஞாயிறு 11 A. M.

(சி-8300)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# பதவி வெற்றிடங்கள்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு (ஒப்பந்த அடிப்படையிலான) 1994 சனவரி 31ஆம் தேதிவரை என்னால் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. பிரதிப் பதிவாளர் (ஒப்பந்த அடிப்படையில்)
   சம்பள அளவுத்திட்டம்: 11,950/- மாதமொன்றுக்கு (நிலையானது)
   தகைமைகள்: 15ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிருவாக அனுபவத்தைக் கொண்டுள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் சிரேட்ட உதவிப் பதிவாளர்/சிரேட்ட உதவிச் செயலாளர்.

   அல்லது

   வினைத்திறமை காண்தடைத் தேவைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள ஏ - 03 (ஏ) சம்பள அளவுத்திட்டத்தில் சம்பளம் பெறும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் / அல்லது உயர் கல்வி நிறுவனத்தின் சிரேட்ட உதவிப்பதிவாளர்/சிரேட்ட உதவிச் செயலாளர்.

   குறிப்பு: நிருவாக அனுபவம் என்பதன் கருத்து இலங்கை நிருவாக சேவையிலுள்ள பதவியொன்றிலோ அதையொத்த பதவியொன்றிலோ அல்லது அதைவிட உயர்ந்த பதவியொன்றிலோ அரசாங்க திணைக்களமொன்றிலோ அரச கூட்டுத்தாபனமொன்றிலோ அல்லது நியதிச்சட்டசபையொன்றிலோ பெற்றுக் கொண்ட அனுபவமாகும்.

   தெரிவு: தேர்வு, நேர்முகப் பரீட்சை ஆகியனவற்றின் மூலம்.

2. உதவிப் பதிவாளர் (ஒப்பந்த அடிப்படையில்)
   சம்பள அளவுத்திட்டம்: ரூபா 5,270/-மாதமொன்றிற்கு (நிலையானது)
   தகைமைகள்: அ) முதலாம் இரண்டாம் ...

இ) கணக்கியலிலும் / அல்லது கணக்காய்விலும் குறைந்த பட்சம் 3 ஆண்டு அனுபவத்துடன் ஐக்கிய இராச்சியத்தின் செலவு முகாமைத்துவக் கணக்காளர் பட்டய நிறுவகத்தின் ஆரம்ப நிலையின் அ, ஆ, பிரிவுத் தேர்வுகளிலும் உயர் தொழில் நிலைத் தேர்வுகளில் பகுதி 1 லும் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் சான்றிதழ் அளிக்கப்பெற்றுக் கூட்டிணைக்கப்பெற்ற கணக்காளர் சங்கத்தின் பகுதி 1, பகுதி 11, பகுதி 111 தேர்வுகளில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஈ) கணக்கியலிலும் / அல்லது கணக்காய்விலும் குறைந்தபட்சம் 3 ஆண்டு அனுபவத்துடன் இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலில் உயர் தேசிய திப்ளோமா.

தெரிவு: தேர்வு, நேர்முகப் பரீட்சை ஆகியனவற்றின் மூலம்.

மேற்குறித்த சம்பளங்களுடன் சம்பளத்தின் 25 சதவீதத்திற்குச் சமனான தொகை 1994, திசெம்பர் 31ஆம் தேதிவரை வழங்கப்படும்.

1993 மார்ச் 15ஆம்தேதிய 564ஆம் இலக்க ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க மாதாந்தப் படியாக பிரதிப் பதிவாளர் பதவிக்கு 750/- ரூபாவும் உதவிப்பதிவாளர் பதவிக்கும் உதவி நிதியாளர் பதவிக்கும் 600/- ரூபாவும் செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் தேதிய 9/93-ம் இலக்க பொது நிருவாகச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

விண்ணப்பங்கள், ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபாவை பல்கலைக்கழகத்திலுள்ள மக்கள் வங்கியில் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் சிரேட்ட உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெறக்கூடிய படிவங்களில் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெற்றுக் கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20/-ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் 23x10 ச. மீ அளவுடைய சுயமுகவரியிட்டு ...


# தவறிவிட்டது

5-1-94 அன்று புத்தூர் சந்தி — சாவகச்சேரி இடையில் சி. சிறீ சுவேந்திரா (சுதன்) என்பவருடைய பிறப்பத்தாட்சிப் பத்திரம், பாடசாலை விலகல் பத்திரம், பரீட்சை பெறுபேறு பத்திரம், நற்சான்றிதழ் பத்திரங்கள் அடங்கிய அப்பியாசக் கொப்பி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கொடிகாமம் திருவருள் ஸ்ரோஸ் வர்த்தக நிறுவனத்தில் ஒப்படைக்கவும்.

(7172)


## ஈழநாதம்

# 4-ம் ஆண்டு நிறைவு

## மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி

ஈழநாதம் மக்கள் தினசரி தனது நான்காம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டியொன்றை நடாத்த முன்வந்துள்ளது.

தலைப்பு:

## ''போராட்டத்திற்கான சிந்தனையை இன்றைய கல்வி ஊட்டுகிறதா?''

போட்டி விதிகள்:

ஃ கட்டுரைகள் தாளின் ஒருபக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஃ சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

ஃ கட்டுரையாளரின் பெயர் முகவரி என்பன தனித்தாளில் எழுதப்பட வேண்டும் என்பதுடன் கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும், அக்கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பொறுப்பு வாய்ந்த ஒருவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ஃ போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1994 ஜனவரி 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஈழநாதம் அலுவலகத்தில் சேர்க்கப்பட வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

ஃ போட்டி முடிவுகள் 17-02-1994 ஈழநாதம் தினசரியில் அறிவிக்கப்படும்.

ஃ இப்போட்டியில் முதலாவது பரிசுபெறும் கட்டுரை நான்காவது ஆண்டுவிழா மலரில் பிரசுரிக்கப்படும்.

ஃ முதல் மூன்று இடங்களையும் பெறும் கட்டுரைகளுக்கு நான்காவது ஆண்டு நிறைவு நாளில் சிறப்புப் பரிசில்கள் வழங்கப்படும்.

ஃ கட்டுரைகள் அனைத்தும் 'ஈழநாதம் ஆண்டு நிறைவுப் போட்டி' என கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் குறிப்பிடப்பட்டு,

ஆசிரியர்

... வீதி, சுண்டுக்குளி.

(7149)

## மனைப்பொருளியலும் கைத்திறனும்

### மகளிருக்கான

### டிப்ளோமா பயிற்சி நெறி

- கேக் ஐசிங்
- உணவு தயாரித்தல்
- உடை தயாரித்தல்
- கை வேலை
- பூ வேலை

**பயிற்சிக்காலம் 6 மாதங்கள்**

- மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புக்கள் நடைபெறும்.
- பயிற்சியின் முடிவில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.
- கிழமை நாள் பிரிவினர்க்கான பயிற்சி திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறும்.
- சனி, ஞாயிறு பிரிவினர்க்கான பயிற்சிகள் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விவரங்களுக்கு நேரில் வரவும்:

**புதிய கிழமை நாள் பயிற்சிகள் ஆரம்பம்; 12.01.94**

**புதிய சனி-ஞாயிறு பயிற்சிகள் ஆரம்பம்: 15.01.94**

## கலாலயா

(தொழிற் பயிற்சியகம்)

**விக்டோரியா வீதி,** **யாழ்.நகர்.**

(ஆஸ்பத்திரியின் பின்புறம்)

(சி-8305)

---

இரண்டாம் வகுப்பு ஆணர்சுடன் (Honours) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம்.

அல்லது

ஆ) பட்டப்பின் பட்டமொன்றுடன் அல்லது நிருவாகத்தில் அல்லது முகாமையில் டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம்.

தெரிவு: தேர்வு, நேர்முகப் பரீட்சை ஆகியனவற்றின் மூலம்.

3. உதவி நிதியாளர் (ஒப்பந்த அடிப்படையில்)

சம்பள அளவுத்திட்டம்: ரூபா 5,270/-மாதமொன்றிற்கு (நிலையானது)

தகைமைகள்: அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டம்.

அத்துடன்

ஆ) கணக்கியலும் / அல்லது கணக்காய்வியலிலும் குறைந்த பட்சம் 3 ஆண்டு அனுபவத்துடன் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் இடைத் தேர்வில் சித்தி.

அல்லது

...டைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பம் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரசகூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவில்லாதவாறு விபரங்கள் அளிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குறிப்பு: ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களும் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
1994-01-05

(சி-8291)

---

## கண்ணீர் அஞ்சலி

### சங்கரப்பிள்ளை நமசிவாயம்

எமது சங்க அங்கத்தவரும், சாவகச்சேரி வர்த்தக சங்கத்தலைவருமாகிய சிவநெறிச்செம்மல் ச. நமசிவாயம் அவர்களுக்கு எமது சங்க சார்பில் கண்ணீர் அஞ்சலிகளை செலுத்துகின்றோம்;

‘வட பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்’

(சி-8302)

---

**ஈழநாதம்**

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்,

என்ற முகவரியிட்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

---

## நினைவு கூருகின்றோம்...

## 1994-01-08

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - பருத்தித்துறை முகாமிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**பாபு** (ராசநாயகம் பாலகிருஷ்ணராசா - அரசுத் தோட்டம், கரவெட்டி மத்தி -யாழ்)

**வின்சன்** (சுப்பிரமணியம் வைகுந்தவாசன் - நெல்லண்டை, பருத்தித்துறை - யாழ்)

1988ஆம் ஆண்டு யாழ் - பெரியவிளான் பகுதியில் இந்தியப்படையினரால் கைது செய்யப்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**ரமேஷ்** (இராசையா சுதாகரன் - சிறுவிளான், இளவாலை - யாழ்)

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி - இராமநாதபுரம் பழையகண்டி வீதியில் இந்தியப்படையினரால் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியிற் சிக்கியதிற் கொல்லப்பட்ட 02 தமிழ் வயோதிபர்கள்.

1992ஆம் ஆண்டு மன்னார் - கல்லாற்றுக்கும் வெள்ளாச்சி வீதிக்குமிடையே தம்பனையாற்றுப் பகுதிக்குச் சென்று கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**வேலன்·விக்கா** (அந்தோனி தயானந்தம் - கருவேப்பங்கேணி - மட்டு)

மட்டக்களப்பு - திகலிவெட்டைப் பகுதியில் பாம்பு கடித்ததில் எமைப்பிரிந்த-

**விக்கி-சிறீப்பிரியா** (அருணாசலம் கந்தசாமி - வந்தாறுமூலை-மட்டக்களப்பு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-8301)

## சிந்தனைக்கு

பூனை கண்ணை மூடிக் கொண்டால் உலகம் இருண்டு விட்டதாக அர்த்தமல்ல

- தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 08-01-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

தபால் பெட்டி எண் 05

# தலைவன் வழிவந்த அறிவிப்பு

கடந்த வருடம் ஏற்பட்ட இராணுவத் தோல்விகளினால், சிறிலங்கா இராணுவக் கட்டமைப்பில் குழப்பங்கள் ஏற்பட்டமை உண்மைதான். ஆனால், இவை இராணுவக் கட்டமைப்பில் நெருக்கடிகள் ஏற்பட்டனவே ஒழிய அக்கட்டமைப்பு முற்றாக அழிந்ததாகவோ, அன்றி முற்றாகச் சீரழிந்து போனதாகவோ இல்லை. அது நெருக்கடிகளுடனும், தமது படையினர் மீது கட்டுப்பாட்டைக் கொண்டே இருந்தது.

அதிலும், குறிப்பாக விமானப்படையின் கட்டமைப்பு ஓரளவு பலமாகவே இருந்தது. கடந்த ஆண்டில், ஒப்பீட்டு ரீதியில், குறைந்த இழப்பைச் சந்தித்ததாகவும் விமானப் படையினரே இருந்தனர். இந்நிலையில், தாவடி, சாவகச்சேரியில், கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது என அறிவித்துள்ளமை, விசமத்தனமானது மட்டுமல்ல, திட்டமிட்ட ஒரு நாசவேலையும் ஆகும். இது, இனப்பிரச்சினை என்பதொன்று இலங்கையில் இல்லை என்ற ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் அறிவிப்பை ஒத்ததாகும். அதாவது, தலைவன் வழி வந்த அறிவிப்பாகும்.

சிறிலங்கா அரசாங்கம் கடந்த காலத்தில் மேற்கொண்ட இனப்படுகொலைகள், தாக்குதல்கள் என்பனவற்றிற்கு பல்வேறு காரணங்களைக் கூறியது. நேரடியாக இராணுவத்தினர் படுகொலை புரிந்தபோது மனநோயாளி என்றும், உணர்ச்சி மேலீட்டினால் செய்யப்பட்டவை என்றும் விளக்கம் கூறப்பட்டது. அதற்கும் மேலாக அப்பாவிப் பொதுமக்களையும் 'பயங்கரவாதிகள்' என்ற சொல்லுக்குள் அடக்குவதும் உண்டு. இதனை சிறிலங்கா ஜனாதிபதி உட்பட பல தரப்பினருமே கூறினர்.

இதேவேளை, விமானப் படையினரின் தாக்குதலுக்குக் கூறப்பட்ட காரணம் தாக்கப்பட்ட இடங்கள் விடுதலைப் புலிகளின் முகாம்கள் என்பதாகும். இதில் கொல்லப்பட்ட பச்சிளம் சிசுக்களில் இருந்து தொண்ணூற்றைத் தாண்டிவிட்ட முதியோர்வரை விடுதலைப் புலிகள் பட்டியலிலேயே சேர்க்கப்பட்டிருந்தனர்.

ஆனால், சாவகச்சேரி, தாவடிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டபோது, தாக்குதல் பற்றித் தனக்கு எதுவுமே தெரியாது என்ற இராணுவப் பேச்சாளரின் கை

# கடத்தப்பட்ட உறுப்பினர் ஐ.தே.கவில் போட்டியிடுவார்

(கொழும்பு)

சிறிலங்காவின் தற்போதை ஜனாதிபதியின் தெளிவான கொள்கை காரணமாக நான் எதிர்வரும் மாகாண சபையின் தேர்தலில் தென் மாகாண சபையில் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினராக போட்டியிடுவேன் என கலைக்கப்பட்ட தென் மாகாண சபையின் கடத்தப்பட்ட உறுப்பினர் விமால்பிரான்சிஸ்கோ தெரிவித்துள்ளார்.

மறைவான இடத்தில் வைத்து பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டியில் மேற் கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் நான் சுகவீனம் அடைந்தமையை மையமாக வைத்து தனது முன்னைய கட்சி நான் காணாமல் போனதாக பொய்ப் பிரசாரஞ் செய்து ஐக்கிய தேசிய கட்சிமீது ஓர் தவறான அபிப்பிராயத்தை நிலவச் செய்தது. இதனை ஈடு செய்ய ஐ.தே.க. வில் போட்டியிடுவதை தவிரவேறு வழியில்லை என்றார்.

இதே வேளை விரைவில் நடைபெறவுள்ள தென் மாகாண சபை தேர்தலில் சூரிய கந்தையில் கண்டு பிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகளின்விவகாரம் பெரிய தேர்தல் பிரசாரமாக அமையும் என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சீனிக் கம்பெனி நிர்வாகம் சீனக்கம்பெனியிடம் அளிப்பு

(கொழும்பு)

சர்ச்சைக்குரியதாகியுள்ள பலவத்தை சீனிக் கம்பெனியின் நிர்வாகம் சீனக் கம்பெனி ஒன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று பெருந்தோட்ட தொழிற்துறை அமைச்சின் செயலாளர் ஆர். எஸ். ஜயரத்தினா கூறியுள்ளார்.

பலவத்தை சீனிக் கம்பெனி நிலை தொடர்பாக மேலும் தெரிவித்த அவர் இது தொடர்பான விரிவான அறிக்கை விரைவில் வெளியிடப்படும் எனவும் தெரிவித்தார்.

பலவத்தை சீனிக் கம்பெனியின் தலைவர் நிமால் அமரசிங்க கூறுகையில் எட்டுப் பேரைக் கொண்ட சீனக் குழுவொன்று பலவத்தையில் முகாமிட்டு தமது பணிகளை ஏற்கனவே ஆரம்பித்து இருப்பதாகத் தெரிவித்தார்.

# வெள்ளத்தால் பாதிப்புற்ற குடிசைகள் மீள அமைக்கப்படும்

(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாகப் பெய்தகடும் மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குடிசைகளை அமைத்து கொடுக்கும் முயற்சியில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபடவுள்ளன.

நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தலைமையில்நடைபெற்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்போது கடந்த கால இராணுவநடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து முகாம்களில் வசித்து வந்த பலரின் குடிசைகள் கடந்த கால மழையால் சேதமடைந்திருப்பதால் அவற்றை உடனடியாக திருத்திக் கொடுக்கும் பணியை அரச சார்பற்றநிறுவனங்கள் மேற்கொள்வதெனவும் இவற்றுக்குத் தேவையான நிதியை யாழ்.அரசாங்க அதிபர் ஒதுக்கீடு செய்வதாகவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

அத்துடன் ஜேர்மன் சனநாயக குடியரசு திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்...

# காரைநகரில் பெண் கொலை

(யாழ்ப்பாணம்)

இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசமான காரைநகரில் வயோதிபப் பெண் ஒருவர் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டு கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர் முருகேசு கனகம்மா (52 வயது) என்பவராவார். பிரேத பரிசோதனைக்காக இவரது சடலம் ஹெலிகொப்டரில் ஏற்றி வவுனியா அரசினர் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இங்கு நடைபெற்ற மரண விசாரணையின்போது ஆறுமுகம் ஐயம்பிள்ளை என்பவர் ...

# அரச விமானசேவை கம்பெனியில் 90 மில்லியன் ரூபா மோசடி

விமானப் பயணிகள் தரையிறங்கும்போது வசூலிக்கப்படும் கட்டணத்தில் பல லட்சம் ரூபா மோசடி இடம்பெற்றிருப்பது தொடர்பாக விமானநிலைய மற்றும் விமானப் போக்குவரத்து அதிகாரிகள் பலர் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான விமானச் சேவைகம்பெனியில் சுமார்90 மில்லியன் ரூபா மோசடி நடந்திருப்பதாக அதன் தலைவர் அட்மிரல் ஆனந்தா சில்வா தெரிவித்தார். இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டு வருவதாகவும் விசாரணை அறிக்கையை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

கட்டணம் வசூலிப்பதில் மோசடி இடம்பெறுவதாகக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து அண்மையில் இரு விமானநிலைய அதிகாரிகள் தற்காலிகமாகக் கடமையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோசடியில் பல அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக அட்மிரல் ஆனந்தா சில்வா மேலும் தெரிவித்தார். கட்டணம் வசூலிக்கப்படும் முறையில் பல குறைபாடுகள் இருப்பதால் இந்த மோசடி பல வருடங்களாக இடம்பெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளப்பாதிப்பு நேரில் பரிசீலனை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் குடிசைகளின் அழிவுகளை தென்மராட்சிப் பகுதியில் சகல கிராம சேவகர் பிரிவிலும் பார்வையிடப்பட்டு வருகின்றது,

இப்பகுதிகளை பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், கிராமசேவகர்கள்நேரில் சென்று நட்டங்களை பார்வையிட்டுவருகின்றனர்.

(86)

# தையல் பயிற்சி ஆரம்பம்

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளினால இடம் பெயர்ந்து வாழும் யுவதிகளுக்கு இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் சாவகச்சேரி, நுணாவில் பிரதேச நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மேற்படி இலவச வகுப்புகளில் இடம் பெயர்ந்த வறிய யுவதிகள் பலர் தையல் பயிற்சியைப் பெறுகின்றனர். இதனால் பல வறிய யுவதிகள் சுயதொழில் முயற்சி மூலம் தமது குடும்ப வறுமையை போக்கவும், வேலைவாய்ப்பு வசதியைப் பெறவும் வாய்ப்பு எட்டியுள்ளதென பிரதேச இணைப்பாளர் திருமதி இ. இராசமணி அவர்கள் தெரிவித்துள்ளார்.

(41)

# நிவாரணம் வழங்கப்பட்டது

# கிரிக்கட் மைதானம் உலர வைக்க உலங்குவானூர்தி பயன்பாடு

(கொழும்பு)

பூநகரி யுத்தம் நடைபெற்றுக் கொண்டு இருந்த வேளை, அதில் காயப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினரை ஏற்றி இறக்குவதற்கு உலங்கு வானூர்தி இல்லாமல் படைஉயர் அதிகாரிகள் பலத்த சிரமங்களை எதிர் கொண்டனர்.

இவ்வேளை வெளி நாட்டு கிரிக்கட்அணியொன்று தனது சுற்றுப் பயணத்தை சிறிலங்காவிற்கு மேற்கொண்டது. இவ் வேளை நடைபெற இருந்த கிரிக்கட் ஆட்டத்தின் ஆடுதளம் ஈரமாக இருந்தமையினால் இதனை உலர வைப்பதற்கு ஓர் உலங்கு வானூர்தி பயன்படுத்தப்பட்டுள்ளது

உலங்குவானூர்தியைக் கொண்டு ஆடுதளம் உலர வைத்ததின் பின் அவ் மைதானத்தில் கிரிக்கட் விளையாட்டு நடைபெற்றது. எனவே இன்று அரசாங்கத்திற்கு காயமடைந்த இராணுவத்தினரை ஏற்றி இறக்குவதைவிட ஆடுதளத்தை உலர வைப்பதே முக்கியமாக இருந்துள்ளதாக பத்திரிகை குறைகூறுகின்றது.

கர்நாடகம், ஆந்திரம்

# சட்டப்பேரவைகள் கலைக்கப்படமாட்டாது

(ஹைதராபாத்)

கர்நாடக மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களில் சட்டப் பேரவைகள் கலைக்கப்பட்டு அங்கு முன் கூட்டியே தேர்தல்கள் நடத்தப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பிரதமர் பி.வி நரசிம்மராவ் கூறியுள்ளார்.

ஆந்திரப் பிரதேசத்தில் மூன்று நாள் சுற்றுப்பயணமொன்றைமேற்கொண்டுள்ள பிரதமர் நந்தியால் தொகுதி போய்ச் சேர்ந்த பின்னர் அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் திட்டவட்டமாக தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியிலுள்ள இந்த இருமாநிலங்களிலும் தேர்தல் நடைபெறுவதற்கு ஒன்பது மாதங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

# நேட்டோ அணியுடன் இணைக்க வேண்டும்

## போலந்து அதிபர் கோரிக்கை

(வார்சோ)

போலந்து, ஹங்கேரி மற்றும். செக் குடியரசு நாடுகளை உடனடியாக நேட்டோ அணி நாடுகளுடன் மேற்கு நாடுகள் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், இல்லை எனின் யூகோ, செலவாக்கியாவில் ஏற்பட்டுள்ள நிலைமை இங்கே ஏற்படலாம் ... ளார்.

அடுத்த வாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டனைச் சந்தித்துப் பேசும் போது ஆறு மாத காலத்தினுள் நேட்டோ கூட்டணி நாடுகளின் பாதுகாப்பு உத்தரவாதம் இக்கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்...

கொல்லப்பட்டபோது, தாக்குதல் பற்றித் தனக்கு எதுவுமே தெரியாது என்ற இராணுவப் பேச்சாளரின் கைவிரிப்பானது, திட்டமிட்ட ஒரு சதி நடவடிக்கை ஆகும்; அதாவது, மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையும், அதன் மூலம் ஏற்பட்ட இழப்புக்களையும் மூடி மறைக்கும் ஒருவகை சதி நடவடிக்கை ஆகும்.

சிறிலங்கா அரசாங்கம் இனப்படுகொலையைத் திட்டமிட்டு மேற்கொள்கின்றது என்ற குற்றச்சாட்டு உலகில் பரவலாக உள்ளது. இதற்குப் போதிய ஆதாரங்களும் உண்டு. இவை தவிர சிறிலங்கா அரசாங்கத்தின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் பற்றி தொடரான கண்டனங்கள் எழுந்தவண்ணமே உள்ளன. சர்வதேச அரங்கில், சிறிலங்காவிற்குப் பாதகமாக உள்ள முக்கிய அம்சமாக மனித உரிமை மீறல்களே உள்ளன.

அத்தோடு, தென்னிலங்கையில்; 'சூரியகந்த' மலைத்தொடர் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'மனிதப்புதைகுழி' சர்வதேச மனித உரிமை ஸ்தாபனத்தின் கவனத்தை முழுமையாகச் சிறிலங்காவின் பக்கத்திற்கு திருப்பியுள்ளது. இது தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் - ஐ. தே. கட்சி - மீது பலமான குற்றச்சாட்டுகளும், சந்தேகங்களும் எழுப்பப்பட்டு அரசாங்கம் பெரும் நெருக்கடியில் சிக்கியும் உள்ளது.

இந்நிலையில்; கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களினால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதும், அவர்களின் சொத்துடைமைகள் அழிக்கப்படுவதுமான செய்திகள் வெளிவருவதென்பது சிறிலங்கா அரசாங்கத்திற்கு மேலும் பல அசௌகரியங்களை ஏற்படுத்தக்கூடும். மேலும், சிறிலங்கா அரசு மீது இவ்வேளையில் எழுப்பப்படும் குற்றச்சாட்டுகள் விரைவிலேயே ஏற்கப்படும் சூழ்நிலையே உலகில் நிலவியும் வருகின்றது.

இந்நிலையில்தான், முன்னர்போல் புலிகளின் முகாம்களைத் தாக்கினோம், 'பயங்கரவாதிகளைக்' கொன்றோம் எனக் கூறி வந்ததைத் தவிர்த்து தாக்குதலையே நடத்தவில்லை - தாக்குதல் நடத்திய தாகத் தகவலில்லை எனக் கூறத் தொடங்கியுள்ளது, இது முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைக்கும் திட்டமாகும். அதாவது, கடந்த கால அறிவிப்புக்களை உலகம் ஏற்றுக்கொள்ளவில்லை புரியத் தொடங்கி விட்டன என்பது சிறிலங்காவிற்கு விளங்கத்தொடங்கியுள்ளது. இதன் காரணமாகவே தாக்குதல் என்பதே நடைபெறவில்லை எனச் சாதிக்க அரசு முனைகிறது.

ஆனால், இது மூடி மறைக்கக் கூடிய விடயமல்ல. கொலைசெய்யப்பட்ட சடலங்களைப் புதைகுழியில்போட்டு மூடினால் அவற்றுடன் உண்மைகளும் புதைந்து போய்விடும் என்ற ஐ.தே.கட்சியின் எண்ணங்களும் சரியானவையல்ல. இன்று 'சூரியகந்த' மலைத் தொடர்ப் பகுதியில் மனிதப் புதைகுழியில் இருந்து வெளியே வரும் எலும்புக் கூடுகளே ஐ. தே. கவின் படுகொலைகளைப் பறைசாற்றப் போதுமானவையாகும்.

---

விசாரணையின்போது ஆறுமுகம் ஐயம்பிள்ளை என்பவர் சாட்சியமளிக்கையில் இறந்தவர் கிணற்றடிக்குப் பக்கத்தில் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டார் என்றார்.

பிரேத பரிசோதனை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி குரல்வளை நெரிக்கப்பட்டதினால் மூச்சுத்திணறி மரணம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவித்தார்.

---

அத்துடன் ஜேர்மன் சனநாயக குடியரசு திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை குடாநாட்டிற்கு எடுத்துவருவதற்கான நடவடிக்கைகளை அரச அதிபர் மேற்கொள்ள வேண்டுமெனவும் அதற்கென அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் சிலர் அரச அதிபர் தலைமையில் இம்மாத இறுதியில் கொழும்பு செல்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

## கசிப்பு வேட்டையில் காவல்துறையினர் தீவிரம்

பருத்தித்துறை தமிழீழ காவல்துறையினர் கசிப்பு உற்பத்தி செய்வோர், விற்பனை செய்வோரை தேடிப் பிடித்து நீதிமன்றம் முன் ஆஜர் செய்யும் பணியில் தீவிரமடைந்து வருகின்றனர்.

65 போத்தல் கோடாவும் 2போத்தல் கசிப்பு மற்றும் உற்பத்தி செய்யும்உபகரணங்களை வைத்திருந்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் அல்வாய் வடக்கு முருகேசு பாலச்சந்திரன் கைது செய்யப்பட்டு நீதியாளர்களினால் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா குற்றம் அறவிடப்பட்டது.

65 போத்தல் கோடா கசிப்பு உற்பத்தி சாமான்கள் வைத்திருந்தவர் என்றபேரில் அல்வாய் வடக்கு சின்னத்தம்பி பூவிலிங்கம் ஆஜர்செய்யப்பட்டு அவருக்கு ஒரு இலட்சம் ரூபா குற்றப் பணம் அறவிடப்பட்டது.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த நமசிவாயம் தெய்வேந்திரம் மற்றும் முடக்காடுநெல்லியடியைச்சேர்ந்த சண்முகம் நல்லையா பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவைச்சேர்ந்த பொன்னையா வேலாயுதம் ஆகியோருக்கு நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது. (யோ)

---

## உடுவிலில் நடமாடும் நூல் நிலையம்

கிறிஸ்தவ வாலிபர் இயக்கத் தேசிய சபை, உடுவில் கிறிஸ்தவ வாலிப சங்கத்தினர் நடமாடும் நூல்நிலையம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

மேற்படி தேசியசபை முதற்கட்டமாக ஐயாயிரம் ரூபா பெறுமதியுடைய புத்தகங்களை உடுவில் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் நடமாடும் நூல் நிலையத்துக்கென வழங்கியுள்ளது. (24)

---

## 'றுகுணு' விரைவில் வரும்

உரம் மற்றும் மருந்துப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 'றுகுணு' கப்பல் விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளது.

தற்போது கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் மேற்படி கப்பலில் யாழ் போதனா வைத்தியசாலைக்கான மருந்துப் பொருள்கள், உரம், கல்வித் திணைக்களத்திற்கான உபகரணங்கள் மற்றும் யாழ் செயலக திருத்த வேலைகளுக்கான கட்டடப் பொருள்கள் ஆகியன ஏற்றப்படுவதாகவும் தெரிய வந்துள்ளது. (ச)

---

## நிவாரணம் வழங்கப்பட்டது

(தென்மராட்சி)

கிளிபனை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சகல குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் 13000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது என செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (86)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

அகில இலங்கை பரஸ்பர சகாயநிதிச் சங்கவருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது நடப்பு வருட இயக்குநர் சபைத் தலைவராக சட்டத்தரணி திரு. த. மு. கதிர்காமநாதன் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சங்க கௌரவ செயலாளராக சுழிபுரம் பிரதேசசபை நிர்வாகப்பொறுப்பாளர் திரு எஸ். திரவியம் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து இயக்குநர் சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## விளையாட்டுப் போட்டி நடைபெற்றது

அரியாலை சந்தோசம் ஞாபகார்த்த பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் அருணோதய சன சமூக நிலைய மைதானத்தில் திரு க. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி விளையாட்டுப் போட்டி நிகழ்வின் போது தேசிய சர்வோதய மாவட்ட இணைப்பாளர் பா. செல்வரத்தினம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றியீட்டிய சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (41)

---

வாக்கியாவில் ஏற்பட்டுள்ள நிலைமை இங்கே ஏற்படலாம் என்றும் போலந்து ஜனாதிபதி லேக் வலேசா கூறியுள்

ரவாதம் இக்கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## ஆப்கான் தலைநகரில் மீண்டும் கடும் சண்டை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில், தலைநகர் காபூலில் கிளர்ச்சிக் குழுத் தலைவரான ஜெனரல் தோஸ்த்தமின் படைகளுக்கும், அதிபர் ரபானியிற்கு ஆதரவு தெரிவிக்கும் படைகளுக்கும் இடையே தொடர்ந்து ஆறாவது நாளாக நேற்றும் பெரும் சண்டைகள் இடம்பெற்றுள்ளன. ஏவுகணை வீச்சுக்களும், விமானத் தாக்குதல்களும், பெருமளவில் இடம்பெற்று உள்ளன.

நகரின் மையப் பகுதியும் வெளிநாட்டு ராஜதந்திரிகளின் வதிவிடங்களும் கூட இத் தாக்குதல்களால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. ஈரான், துருக்கி, தூதுவரகங்கள் உட்பட வெளிநாட்டு தூதுவராலயங்களும் தாக்கப்பட்டுள்ளன எனினும் இத் தாக்குதல்களில் காயமடைந்த அல்லது உயிரிழந்தவர்கள் பற்றிய விபரம் எதுவும் தெரிய வரவில்லை.

## முர்தாஸாவின் ஆதரவாளர் மீது பாக். பொலிசார் துப்பாக்கிச் சூடு

### ஏழு பேர் ஸ்தலத்தில் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சிறை வைக்கப்பட்டுள்ள முர்தாஸா பூட்டோவின் ஆதரவாளர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு நேற்று முன்தினம் லட்கானா பகுதியில் பாதுகாப்பு படைகளுடன் மோதலில் ஈடுபட்டதில் ஏழு பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமுற்றனர்.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற சுல்பிகார் அலி பூட்டோவின் பிறந்தநாளை முர்தாஸா பூட்டோவின் ஆதரவாளர்கள் கொண்டாடிக் கொண்டிருந்தபோது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது. காலை ஒன்பது மணியளவில் பொலிசார் ஆரம்பித்த துப்பாக்கிப் பிரயோகம் சுமார் நாற்பத்தைந்து நிமிடங்களுக்கும் மேலாக நீடித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பூட்டோவின் இல்லத்தைப் பெருமளவில் முற்றுகையிட்ட பொலிஸ் படைகள் முன்னாள் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோ நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு இளைஞர்களைச் செல்ல விடாது தடுத்தபோது மோதல் ஏற்பட்டுள்ளது. திருமதி பேகம் நுஸ்ரத் பூட்டோ தமது ஆதரவாளர்களுடன் நல்லடக்கம் செய்யப்பட்ட மசார் பகுதியை நோக்கிச் செல்ல முற்பட்டபோது துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது.

தனது தந்தையின் மசாருக்கு செல்ல அனுமதிக்குமாறு பிரதமர் பெனாசிர் பூட்டோவின் அரசினால் சிறை வைக்கப்பட்டுள்ள முர்தாஸா பூட்டோ விடுத்த வேண்டுகோளை கராச்சி நீதிமன்றம் ஏற்கனவே நிராகரித்தது குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## பதவி வெற்றிடம்

### லொறிச்சாரதி - 312/11 (நிரந்தரம்)

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களைச் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இப் பதவிக்கு வயதெல்லை 18 முதல் 40 வயது வரையாகும். மேலும் கல்வித்தகைமைகள், வேதனம் பற்றிய விபரங்களை சங்கத் தலைமை அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய உங்கள் விண்ணப்பங்களை கல்விச்சான்றிதழ், நற்சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் ''தலைவர், பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு 1994-01-22-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கவும். நீங்கள் அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''லொறிச் சாரதி பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
1994-01-06 (சி-8307)



## யா. மா. நகைத் தொழிலாளர் சங்கம்

### நகைத் தொழிலாளர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள்

அன்புடையீர்!

8-1-94 இன்று சனிக்கிழமை பி. பகல் கன்னாதிட்டிப் பகுதியில் நடைபெற இருக்கும் போர்க்கால கருத்தரங்கில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ள இருப்பதால் அனைத்து நகைத் தொழிலாளர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர், செயலாளர்
யா. மா. நகைத் தொழிலாளர் சங்கம்

இந் நிகழ்வில் பூநகரி வெற்றிச் சமர் வீடியோ காண்பிக்கப்படும்

பிரசுர அன்பளிப்பு

ச.கணேசமூர்த்தி நகைவியாபாரம்
இல. 55, கன்னாதிட்டி,



நீங்காத நினைவில் ஓராண்டு

## கண்ணீர்ப் பூக்கள்



### தே. யோகராஜா

(யாழ் இந்து கல்லூரி ஆசிரியர் B. Com )

மண்ணுலகில்: 25 - 12 - 1961
பொன்னுலகில்: 08 - 01 - 1993

கணக்கியல் துறை சார்ந்தே தினமும்
கடமைகள் காத்து வந்தீர் ஐயா!
இணக்கமாய் கணித பாடமதை
எம்முடன் இணைத்து வைத்தீர் ஐயா!
சுணக்கமாய் கற்கும் மாணவரை
சுறுசுறுப்படைய வைத்தீர் ஐயா!
வணக்கத்திற்குரிய எங்கள் குருவே
வாழ்ந்திடும் வழிகள் காட்டி எங்கு சென்றீர் ஐயா!

நாளை வரும் கல்விச் சமூகம்
நல்ல நிலை அடைவதற்காக
வாழையடி வாழையாக பாரில்
வளமான சேவை செய்து
தோழமை அன்பு கொண்டொழுகி
தொண்டாற்றி நின்றீர் ஐயா!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்

மூனாமலை,
மானிப்பாய்.

அன்பு மனைவி
ஆசிரியர்கள் - மாணவர்கள்

(7171)


## நினைவஞ்சலி



பிறப்பு:
06-7-1968

வீரச்சாவு:
11-11-1993

### லெப். பிறையாளன்

(மரியதாஸ் புவனேந்திரன்)

களத்தில் புலிவீரன் வீழ்கையில்
பதறுவாயே!
இன்று நீ ........ ......
என்றும் உன் நினைவில்
நாங்கள்

உன்னுடன், அனைத்து ம வீரர்களையும் நினைவு கூருகிறோம்.

8-1-1994-ல் (இன்று) எமது வீட்டில் நடக்கும் மதிய

## கண்டெடுக்கப் பட்டுள்ளது

ஸ்ரேசன் பின் வீதியில் பெண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்று ஏ. ஜே. ரவீந்திரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

ஃ ஃ

தேவராசா சயந்தன் என்பவரால் திருநெல்வேலிச் சந்தியில் கடந்த 4ஆம் திகதி காலை பெண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது,

## கலந்துரையாடல்

வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக் கல்லூரி மாணவர்களுக்கான கலந்துரையாடல் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்படி நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கேட்டுக் கொள்கிறது.

ஃ ஃ ஃ

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 10-ம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணியளவில் புதிய விஞ்ஞான கல்விக் கழகத்தில் (எழிலகம் முன்பாக) நடைபெற இருப்பதால் தயவுசெய்து யாவரையும் தவறாது பிரசன்னம் ஆகும்படி விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு கேட்டுள்ளது.

## வதிவிட வேளாண்மை கலந்துரையாடல்

அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து வதிவிட வேளாண்மை தொடர்பாக தமிழீழ பொருண்மியமேம்பாட்டுநிறுவனம் நடாத்தும் கலந்துரையாடல்கள் இன்று பிற்பகல் மூன்று மணியளவில் ஒட்டுமடம் மாவீரர் சனசமூக நிலையத்திலும், நாளைக் காலை பத்து மணியளவில் கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்திலும், செவ்வாயன்று பிற்பகல் நான்கு மணியளவில் கோண்டாவில் பாரதி சனசமூக நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

## கருத்தரங்கு

இன்று கோப்பாய் மகா வித்தியாலயத்தில் 8 30மணி தொடக்கம் 4 30 மணிவரை நிகழவிருக்கும் கருத்தரங்கில்

# தி.மு.கவில் 42 வீதமானோர் கோபாலசாமிக்கு ஆதரவு

### கருத்துக்கணிப்பு தெரிவிப்பு

(சென்னை)

தி.மு.கவில் 42 சதவீதமானோர் வை. கோபாலசாமியை ஆதரிப்பதாகவும் 36 சதவீதமானோர் கருணாநிதியின் அடுத்த வாரிசாக வை. கோபாலசாமியை ஏற்றுள்ளதாகவும் சென்னை கிறிஸ்தவ கல்லூரி மாணவர்கள் நடாத்திய மாநில கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

தி.மு.கவை முழுமையாக ஆதரிப்பவர்களில் 47 சதவீதமானோர் கோபாலசாமியை கட்சியை விட்டு நீக்கியது தவறு என்கின்றனர். 35சதவீதமானோர் நீக்கியதை ஆதரித்துள்ளனர். கருணாநிதிக்கு அடுத்த வாரிசாக அன்பழகனை 24 சதவீதமானோர் ஆதரித்துள்ளனர்.

# தங்கச்சங்கிலி அறுத்தோர் நீதிமன்றத்தில் ஆஜர்

(வடமராட்சி)

புலோலி மேற்கில் வீதியால் சென்ற வயோதிபப் பெண்மணியிடம் 15 ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த மூன்று பவுண் தங்கச் சங்கிலியை அறுத்தவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இருவர் பருத்தித்துறை காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றம் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிமன்றம் முன் ஆஜர் செய்யப்பட்ட அருளானந்தம் அசோக்குமார், சங்கரப்பிள்ளை ஜெயக்குமார் ஆகியோருக்கு நீதியாளர்கள் தலா 8 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தனர். (யோ)

## தளபதிகள் சந்திப்பு

(கொழும்பு)

புதிய இராணுவத் தளபதி ஜெனரல் ஜெரி டி சில்வாவும், புதிய பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வாவும் நேற்று விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தனாவை முதன் முறையாக உத்தியோகபூர்வமாகச் சந்தித்தனர்.

பெனத்தலோக மாவத்தையிலுள்ள விமானப் படைத் தலைமை அலுவலத்தில் இடம்பெற்ற சம்பிரதாயபூர்வ அணிவகுப்பைத் தொடர்ந்து வரவேற்பு அளிக்கப்பட்டது. விமானப்படைத் தளபதியுடன் சிரேஷ்ட விமானப்படை அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர்.

## உண்ணாவிரதிகள்

தனித்துநின்று வாக்குவாதப் பட்டதாகவும், கூட்டத்தினர் இதனை மீறி தம்மை மிதித்தபடி உள்ளே சென்றதாகவும் அவர் சொன்னார்.

இந்த உண்ணாவிரதத்தில் எம்மோடு இருந்த மாகாண சபை உறுப்பினர் ஒருவர் இக் கோஷ்டியினரைக் கண்டதும் தனது மெய்ப்பாதுகாவலர்களுடன் எங்கு ஓடினார் என்று தெரியவில்லை என்றும் அப்பெண் ஊழியர் குறிப்பிட்டார்.

இக் கோஷ்டி உள்ளே சென்றதும் வெடிச்சத்தம் ஒன்று கேட்டது திரு. விஜேசிங்கம் இருந்தபக்கமாகவே இந்தச்

## துக்கம் அனுஷ்டிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரியில் கடந்த மாதம் 30-ம் திகதி புக்காரா விமானங்கள் நடாத்திய றொக்கட் தாக்குதலில் காயமடைந்து நேற்றுமுன்தினம் மரணமடைந்த சாவகச்சேரி வர்த்தக சங்கத்தலைவர் ச. நமசிவாயம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி மூன்று தினங்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. நேற்று சாவகச்சேரிப் பகுதியில் சகல வர்த்தகநிலையங்களும் மூடப்பட்டிருந்தன. வீதிகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன (86)

## காய்ச்சலினால் மரணம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் பரவிவரும் புதுவிதக் காய்ச்சலுக்கு மூன்று வயது சிறுவன் ஒருவர் பலியானார். கொடிகாமம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த பரஞ்சோதி சதீஸ்குமார் என்னும் இச் சிறுவன் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

## செய்தியாளர்கள்

மையினால் இவர்மீது விசாரணை மேற் கொள்ளப்படும் என இரகசிய பொலிசார் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிற்கும் அரசாங்கத்திற்கும் அபகீர்த்தி ஏற்படுத்

ச.கணேசமூர்த்தி நகைவியாபாரம்
இல. 55, கன்னாதிட்டி,
(சி-8306) யாழ்ப்பாணம்

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரேநிறுவனம்)

**O/L SAT, SUN CLASSES**
(சனி, ஞாயிறு வகுப்புகள்)

ஆரம்பம் :
**09-01-1994**
(ஞாயிறு) காலை 8 மணி

திறமையால் பிரபல்யமான திறமைமிக்க
யாழ். முன்னணி ஆசிரியர்குழு

| | | | |
|---|---|---|---|
| 8 - 9 | விஞ்ஞானம் | — | திரு. J. R சூரி |
| 9 -10 | கணிதம் | — | திரு. ஜெகன் |
| 10-11 | சமூகக்கல்வி | — | திரு. கோபி |
| 11-12 | ஆங்கிலம் | — | திரு. விஸ்வநாதன் |
| 12- 1 | தமிழ் | — | திரு. திருப்பதி |
| 1 - 2 | சமயம் | — | திரு. சங்கர் |
| 2 - 3 | வர்த்தகம் | — | திரு. கருணாகரன் |

❋ தூரஇட மாணவர்களின் நன்மைகருதி மேற்படி வகுப்பு ஆரம்பிக்கப்படுகிறது.

❋ அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்யவும்
(சி-8309)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உன்னுடன், அனைத்து ம வீரர்களையும் நினைவு கூருகிறோம்.

8-1-1994-ல் (இன்று) எமது வீட்டில் நடக்கும் மதிய போசனத்தில் உற்றார், உறவினர், போராளி நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறோம்.

இல. 46, இலந்தக்குளம் வீதி, -குடும்பத்தினர்.
மாம்பழம் சந்தி (அருகாமை)
யாழ்ப்பாணம். (சி-8308)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



**பிறைசூடி இராசேஸ்வரி (பவா)**

தோற்றம் **27-07-1951** — மறைவு **20-12-1992**

திதி -- 08-01-1994

அம்மா,

அன்பின் பிறப்பிடமே, பண்பின் உறைவிடமே, பாசத்தின் ஒளிவிளக்கே, குடும்பத்தின் திருவிளக்கே, எங்கள பவாக்குஞ்சே நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றதம்மா எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகிறோம்

நல்லூர், என்றும் உங்கள் பிரிவால் வாடும்
செட்டித்தெரு. கணவன், பிள்ளைகள், சகோதரர்கள்,
(7169) உறவினர்கள், நண்பர்கள்.

இன்று கோப்பாய் மகா வித்தியாலயத்தில் 8 30மணி தொடக்கம் 4 30 மணிவரை நிகழவிருக்கும் கருத்தரங்கில் வடக்கு வலய சகல ஆசிரிய ஆலோசகர்களையும், விசேட உதவிக் கல்விப் பணிப்பாளர் களையும் கலந்து கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் க.கந்தசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

குறிப்பிட்டார்.

இக் கோஷ்டி உள்ளே சென்றதும் வெடிச்சத்தம் ஒன்று கேட்டது திரு. விஜேசிங்கம் இருந்தபக்கமாகவே இந்தச் சத்தம் கேட்டது. அவருக்கு ஏதும் விபரீதம் நடந்துவிட்டதோ என எண்ணி அந்தப் பக்கம் சென்றோம் ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை என்பதை அறிந்து கொண்டோம் என்றார்.

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது
யாழ்நகர் **ஸ்ரீதர்** திரையரங்கில்
***"INTRUSION CAMBODIA"***
தினசரி மாலை 4.00, மாலை 6 மணி
சனி, ஞாயிறு காலை 10.30, பி.ப.2.30 மணி
மாலை 4.00, 6.00மணி
(சி 8315)

## மரண அறிவித்தல்

### சந்தியா ஆசீர்வாதம்
(விஷகடி வைத்தியர்)

சந்தியா ஆசீர்வாதம் 6-1-94 அன்று காலமானார். அன்னார் ஆரோக்கியத்தின் அன்புக்கணவரும், தேவசகாயம், அல்பிரட், பற்றிமாராணி, அன்னமேரி, மேரி மெற்றலீன், சரோஜா, றெஜினா, ஜெயராணி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தேவராஜா, இராஜரெத்தினம், பேதுறுப்பிள்ளை, பெனடிற், அன்ரனிதாஸ், யேசுராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அல்பிரட் ஜனார்த்தனின் அன்புப் பேரனுமாவார். அன்னாரது பூதவுடல் 6-1-94 அன்று பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டதென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அந்தோனியார் முகாம் (2), தகவல்:
மானிப்பாய். திருமதி ஆசீர்வாதம்
(7170) (மனைவி)

என இரகசிய பொலிசார் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டிற்கும் அரசாங்கத்திற்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் சூரியகந்த விவகாரத்தில் செய்திகள் வெளியிட்டமையை அடிப்படையாகக்கொண்டே இவர்கள் மீது விசாரணை மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகின்றது.

நேற்று நடைபெற்ற இவ் விசாரணையைதொடர்ந்து ஏனைய பத்திரிகை நிறுவன செய்தியாளர் பீதி அடைந்திருப்பதாக தெரியவருகின்றது:

### கற்பித்தல்

கொள்ளபபட்ட மதிப்பீட்டில் எல்லாமாணவர்களும் அறிவு மற்றும் செயன்முறை மனப்பாங்குகளில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடைந்துள்ளனர் என்பதை அவதானிக்க முடிந்தது.

இப் பயிற்சி மதிப்பீட்டு நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அபிவிருத்தித் திட்ட பிரதமகல்வி அதிகாரிகள் மற்றும் திரு. இளங்குமரன்ஆகியோர்பங்கு பற்றி பாராட்டுகள் தெரிவித்தனர் இத்திட்டத்தை பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் நெறிப்படுத்தியுள்ளார். (பா)

### பாடசாலை

பாடசாலை மூடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இத் தாக்குதலின்போது பாடசாலையும் சேதமடைந்தது.

காயமடைந்த இம் மாணவி யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ் உலங்குவானூர்தி ஆவரங்கால், புத்தூர் பகுதி மக்கள் குடியிருப்புகள்மீதும் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றபோதிலும் இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை. (ச,சி)